Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14    Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 20    நவம்பர் 2014    கானம் : 4



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை




வேணு : 20    நவம்பர் 2014    கானம் : 4



அக்டோபர் 5 செங்கல்பட்டு சத்சங்கம் - ஸ்ரீ பத்மாவதி கல்யாணம்



அக்டோபர் 5 செங்கல்பட்டு அருகே விட்டலராஜன் கோவில்



செப்டம்பர் 24 சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா துவக்கம்



அக்டோபர் 24
ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர தினம் ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரில்

அக்டோபர் 11 புரட்டாசி கடைசி சனிக்கிழமை ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் அன்னகூடோத்ஸவம்



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY


அக்டோபர் 6-12 பூர்ணிமாஜீ - சிவகாசி நாமத்வாரில்
ஸ்ரீமத் பாகவத உபன்யாசம்


அக்டோபர் 14-18 முரளீஜீ - மதனகோபால் ஸ்வாமி கோவிலில் சத்சங்கம்
மதுரை



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY


செப்டம்பர் 20-28 ராமானுஜம்ஜீ சிங்கப்பூர் நாமத்வார் சார்பாக
சிங்கப்பூர் பி.ஜி.பி கல்யாண மண்டபத்தில்
ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம்


செப்டம்பர் ராமானுஜம்ஜீ வளைகுடாவில் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம்




செப்டம்பர் 24 – பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகம்
“ஸீதாராம ஹால்” க்ரஹப்ரவேசம்
செப் 25–அக் 1, 2014 – ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் ப்ரவசனம்







PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 நவம்பர் 2014 கானம்: 4

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-224 | 03 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 |
| பாகவத பழம்- ஸ்க 2/18 | 09 |
| சத்சங்கம் .. | 12 |
| ஞானியின் சன்னிதி .. | 21 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 23 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| சத்சங்க செய்திகள் | 28 |
| பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| மாலே மணிவண்ணா | 31 |
| செய்நன்றி | 33 |

முதலில் நீ வசிக்கும் வீட்டையும், சுற்றுச் சூழல்களையும் சுத்தமாக வைத்திரு. பிறகு தெய்வங்களைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கும் கோவில்களை சுத்தம் செய். முக்கியமாக, ஆண்டவன் வீற்றிருக்கும் உன் ஹிருதயத்தை சுத்தமாக வைத்திரு.

-ஞானானந்தகிரி ஸ்வாமிகள்

PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : சிந்து பைரவி

சைதன்ய தேவா சரணம் ஸ்ரீக்ருஷ்ண
சைதன்ய தேவா சரணம் சரணம் (சைதன்ய தேவா..)

வரண்ட என் இதயத்தில் - க்ருஷ்ண
ப்ரேமையை நீயும் தெளித்திடுவாயே (சைதன்ய தேவா..)

பல விதம் விதமாய் பாடி ஆடினாலும்
ப்ரேமை இல்லாவிடில் பலனொன்றுமில்லை
(சைதன்ய தேவா..)

க்ருஷ்ண ப்ரேமை எனும் அருவியிலே
என்னையும் நீராட்டிடுவாய் நீயே
(சைதன்ய தேவா..)

பின் அட்டை:
அக்டோபர் 24, 2014
மதுரபுரி ஆஸ்ரமம் - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர தினத்தன்று




Condemning bad alone is not enough; Appreciating good is also needed to avoid bad in the future.
- Maharanyam Sri Sri Muralidhara Swamiji



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# மதுரமான மஹநீயர் - 224

-வாத்யார் வெங்கட்ராமன்
(சாந்தீபனி குருகுலம்)

உளுந்தூர்பேட்டை அருகில் உள்ள சிறுபாக்கம் என்பது, எங்களுடைய சொந்த ஊர். அந்த ஊரில் உள்ள ஒரு பள்ளி ஆசிரியர் என்னுடைய தந்தை. என்னையும், என்னுடைய அண்ணன் ஜகதீசன் இருவரையும் வேதபாடசாலையில் சேர்த்தார்கள். நாங்கள் இருவரும், காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்து, படித்து வந்தோம். இப்பொழுது, கோயம்புத்தூரில் ஒரு பெரிய வேதஸ்தாபனத்தை ஸ்தாபித்து நடத்தி வரும், ஜம்புநாத கனபாடிகள் எங்களுக்கு சொந்தம்.

அவர் முதலில், மைசூரில் பாடசாலை வாத்யாராக இருந்தார். நம் ஸ்ரீஸ்வாமிஜி ஒரு பாடசாலை ஆரம்பிக்க ஆசைப்பட்டார். அதன் பொறுப்பை, ஜம்புநாத கனபாடிகள் ஏற்று கொண்டார். முதலில் பாடசாலை வளசரவாக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது நானும், என் அண்ணன் ஜகதீஷும் வந்து சேர்ந்தோம். அன்று முதல் இங்கேயே படித்து நானும், என் அண்ணாவும் வாத்யாராக உள்ளோம். என் அண்ணன் ஜகதீஷ் குருஜியுடனேயே இருக்க வேண்டும் என்பதற்காக பிடிவாதமாக கல்யாணம் செய்து கொள்ளவில்லை. நானும் பிடிவாதமாக கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று இருந்தேன். ஆனால் குருஜி என்னை, ‘‘கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அது உனக்கு விதிக்கப்பட்டுள்ளது’’ என்று கூறினார். அதுபோலவே அவரே எனக்கு, முன் இருந்து பெண் பார்த்து, ராஜலட்சுமியை கல்யாணம் செய்து வைத்தார். கல்யாணம் தஞ்சாவூரில் குருஜியின் பரமபக்தரான, சாவித்ரி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு சொந்தமான, ஆண்டாள் கல்யாண மண்டபத்தில் வெகு விமரிசையாக நடந்தது. குருஜியின் பக்தரான சாவித்ரி ராமகிருஷ்ணன், மண்டபத்திற்காக, ஒரு பைசா கூட வாங்கி கொள்ளவில்லை. குருஜி வந்து முழுவதுமாக, கல்யாணத்தில் கலந்து கொண்டார். கல்யாணம் நடந்த சில நாளில் என் தாயார் காலமாகி விட்டார்கள். குடும்பமே ஆட்டம் கண்டு விட்டது.


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

குருஜி என் தந்தையிடம், ‘‘உங்களுடைய மனைவியின் ஆயுட்காலம் முன்பே முடிந்து விட்டது. நான்தான் கல்யாணம் முடியும் வரை, ஆயுள் இருக்கட்டும் என்று பகவானிடம் பிரார்த்தித்து கொண்டேன். அதன்படிதான் நடந்துள்ளது. கவலை வேண்டாம்’’ என்று சமாதானப்படுத்தினார். அப்பொழுதுதான் எல்லோருக்கும் உண்மை புரிந்து சமாதானம் ஏற்பட்டது.

ஒருமுறை, என் தந்தையின் உடல்நிலை, மிகவும் மோசமாகி விட்டது. அவர் உயிர் பிழைப்பதே கஷ்டம் என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். என் அண்ணா ஜகதீஷ், குருஜியிடம் தந்தையின் நிலையை சொல்லி அழுதான். உடனே குருஜி சிறிது விபூதியை கையில் வைத்து கொண்டு, ஜபம் செய்து அவனிடம் கொடுத்தார். அவன் அதை எடுத்து சென்று ஐ.சி.யூவில் இருந்த அப்பாவின் நெற்றியில் இட்டு விட்டான். இட்ட உடனே, அவருக்கு ஒரு ஷாக் அடிப்பது போல, உடலில் ஒரு உதறல் ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக சரியாகி, இன்று வரை அவர் என்னுடனே இருந்து வருகின்றார்.

பாடசாலை முதலில், வளசரவாக்கத்தில் இருந்தது என்று சொன்னேன் அல்லவா? பிறகு சிறிது காலம் கழித்து, ஆஸ்ரமம் மாறி விட்டது. அப்பொழுது பழைய குஞ்சபவனம் கட்டிடம் இருந்தது. அங்கு சில ஸ்வாமி படங்கள் மாட்டி இருந்தது. அவைகளில் ஒட்டடை படர்ந்து, தூசி ஒட்டி இருக்கும். அவைகளை சுத்தம் செய்ய வேண்டும் என்று கை துறு துறுத்தது. அப்பொழுது நானாக ஏதாவது செய்ய தயக்கம். ஏன் என்றால், நான் அப்பொழுது மாணவன்.

"குருஜியிடம் மானஸீகமாக ப்ரார்த்தனை செய்து பார்ப்போம். குருஜி, அந்த ஸ்வாமி படங்கள் எல்லாம் ஒட்டடை படிந்து தூசியாக உள்ளதே; இவைகளை சுத்தம் செய்ய வேண்டும்’’ என்று ஒருநாள் மனதினால் பிரார்த்தனை செய்து கொண்டேன். ஓரிரு நாளில், குருஜி ஆஸ்ரமம் வந்தார். பாடசாலை குழந்தைகளுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ‘‘இந்த ஸ்வாமி படங்கள் எல்லாம் தூசி படிந்து, ஒட்டடையாக உள்ளதே. இவைகளை சுத்தம் செய்ய வேண்டுமென்று உங்களில் யாருக்காவது தோன்றியதா? அவைகளை சுத்தம் செய்ய வேண்டும். ஆனால் அதை வெங்கட்ராமன்தான் செய்ய வேண்டும்’’ என்று சொல்லிவிட்டு என்னை பார்த்து சிரித்தார். இப்படி எவ்வளவோ நிகழ்வுகள்.


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

வருடாவருடம் ஸ்ரீமஹாபெரியவாள் ஜெயந்தி, ந்ருஸிம்ம ஜெயந்தி, துளசி கல்யாணம், ஹோலி, கோபாஷ்டமி போன்ற பல விஷயங்களை குருஜி கொண்டாடுவார். ஆனால், எல்லாம் ஸாத்வீகமாகவும், தெய்வீகமாகவும் இருக்கும். ஒரு வருடம் சித்திரை மாதமே மஹாபெரியவாள் ஜெயந்தி, ந்ருஸிம்ம ஜெயந்தி எல்லாம் கொண்டாடினார். எனக்கும் வாத்யார் சிவராமனுக்கும் ஒரே குழப்பம். 'வைகாசி மாதமே வரவில்லை. ஏன் இப்பொழுதே கொண்டாடுகின்றார்'. சமயம் பார்த்து நானும், சிவராமனும் குருஜியிடம் கேட்டோம். "இன்னும் வைகாசி மாதமே பிறக்கவில்லையே; அதற்குள் மஹாபெரியவாள் ஜெயந்தி, ந்ருஸிம்ம ஜெயந்தி எல்லாம் செய்கின்றீர்களே" என்றோம். அதற்கு குருஜி, "அடுத்த மாதம் என் அப்பா, பகவான் திருவடியை அடைந்து விடுவார். எனக்கு தீட்டு வந்து விடும். எனக்கு இதெல்லாம் கொண்டாட வேண்டும் என்று ஆசை; அதனால் இப்பொழுதே செய்து பார்த்து ஆனந்தப்படுகிறேன்" என்றார்.

இரவு நீண்ட நேரம் ஜபம், தியானம் என்று மாடியிலோ அல்லது தனி அறையிலோ அமர்ந்து, செய்து கொண்டிருப்பார். அப்பொழுது பலமுறை நானும் அவருடனே அமர்ந்திருப்பேன். அப்பொழுது தனக்கு ஏற்படும் அனுபவம், காட்சி, மற்றும் பகவத் விஷயமாக சிலவற்றை தெரிவிப்பார். அப்பொழுது ஆச்சர்யமாகவும், ஆனந்தமாகவும் இருக்கும். இப்படி ஒரு விஷயம் நடக்க போகின்றது என்பார். காலக்ரமத்தில் அந்த விஷயம் அப்படியே நடக்கும். ஆனால் இவைகளை எல்லாம் அநேகமாக மறந்து விடுவேன். "இவ்வளவு அபூர்வமான பல விஷயங்களை என்னிடம் பகிர்ந்து கொள்கின்றீர்கள். ஆனால் அவைகளை நான் மறந்து விடுகின்றேனே" என்று சொல்லி வருத்தப்பட்டேன். அதற்கு சிரித்து கொண்டே, "அதனால்தான் இதையெல்லாம் உன்னிடம் சொல்கின்றேன்" என்று கூறி விட்டார். நாம் ஓரிடத்திற்கு சென்று விட்டு வந்தாலோ அல்லது வீட்டிலிருந்து வந்தாலோ, அங்கு என்ன பேசினோமோ அதே விஷயங்களை ஏன் வார்த்தைகளையும், அப்படியே சொல்லி ஆச்சர்யத்தில் ஆழ்த்துவார்.

குருஜிக்கு வரும் பக்தர்கள் கொண்டு வரும் பொருள்களை, தான் கொஞ்சம் எடுத்து கொண்டு, அது தின்பண்டமாக இருந்தால், பாடசாலை குழந்தைகளுக்கு


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

கொடுத்து விடுவார். மற்றும் சில பொருள்களை என் வீட்டிற்கு என்னிடம் கொடுத்தனுப்புவார். ஒருநாள் என் மனைவி, 'என்ன நமக்கு குருஜியிடம் இருந்து சீர்வரிசை வந்து நாளாகி விட்டது' என்று சொன்னாள். நான் ஆஸ்ரமம் சென்றேன். குருஜி ஜி6 ரூமில் இருந்தார். என்னை கூப்பிட்டனுப்பி கதவை திறந்தவுடன், கைகளில் சில பொருள்களை வைத்து கொண்டு நின்று கொண்டு இருந்தார். அவைகளை என்னிடம் கொடுத்து, "இதையெல்லாம் ராஜலட்சுமியிடம் சீர்வரிசை என்று சொல்லி கொடு" என்றார். எனக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது.

ஸ்ரீப்ரேமிகவரதன் பூஜையை பார்த்து கொண்டிருக்கும் யோகேஷ் ஊரில் இல்லை என்றால், நான்தான் பார்த்து கொள்வேன். அப்பொழுதெல்லாம், "நீ பூஜை செய்கின்றாயே உனக்கு ஏதாவது அனுபவம் ஏற்படுகின்றதா? திவ்ய கனவுகள் வருகின்றதா?" என்று கேட்பார். 'எனக்கெல்லாம் எப்படி குருஜி ஏற்படும்' என்றேன். அதற்கு குருஜி, 'ஒரு இடத்தில் சான்னித்யம் அதிகம் இருந்தால், எல்லோருக்கும் ஏதாவது ஒரு அனுபவம் ஏற்படும். பகவான் இங்கு ப்ரத்யக்ஷமாக உள்ளான். அதனால்தான் கேட்டேன்' என்றார். இது நடந்து சில நாட்களில் எல்லாம், ப்ரேமிகவரதன் ஊஞ்சலில் ஆடுவது போலவும் பூஜை செய்வது போலவும் அடிக்கடி கனவு வர ஆரம்பித்தது.

ஒருநாள் இரவு, அதிக நேரம் கண் விழித்ததால் காலையில் சீக்கிரம் எழுந்திருக்க முடியவில்லை. நான்தான் போய் ப்ரபோதனம் செய்ய வேண்டும். என்னை யாரோ தட்டி எழுப்புவது போல் இருந்தது. அலட்சியப்படுத்தி விட்டு, தூங்க ஆரம்பித்தேன். மீண்டும் என் கைகளில், யாரோ தட்டினாற் போல் இருந்தது. கண்களை திறந்து பார்த்தால், கைகளில் புல்லாங்குழலை வைத்து கொண்டு, ஒரு குட்டி பையன் தலையில் மயில் பீலியுடன், என்னை பார்த்து சிரித்து விட்டு, ஒரு ஓட்டம் ஓடி ஆஸ்ரமம் பக்கமாக மறைந்து விட்டான். அப்பொழுதுதான், பகவான் இங்கு ப்ரத்யக்ஷமாக உள்ளான் என்று குருஜி சொன்னது எனக்கு புரிய வந்தது. ப்ரேமிகவரதனை நான் எழுப்புவதற்காக, அவன் வந்து என்னை எழுப்பினான்!!

இப்படி எவ்வளவோ அனுபவங்கள் ஸ்மரணே சுகம்!


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

## *ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம்*

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி (நவ 24) ஆஸ்ரமத்தில் மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு சிறப்பு பூஜையும் திருமஞ்சனமும் நடைபெற்றது. ரிக், யஜூர், சாம வேதபாராயணம் சாந்தீபனி குருகுல அத்யாபகர்களால் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்பாக மிக நேர்த்தியாக செய்யப்பட்டது. ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாளுக்கும் ஸ்ரீஜய ஹனுமானுக்கும் சிறப்பு பூஜையும், அன்பர்களால் இடைவிடாத மஹாமந்திர கீர்த்தனமும் நடைபெற்றது.

ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் திருவண்ணாமலையை சேர்ந்த நீதியரசர் ஸ்ரீ டி.எஸ்.அருணாசலம் அவர்கள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு சிறப்பு புஷ்பாஞ்சலி செய்தார்கள். அது அன்பர்கள் மகிழும் வண்ணம் ஸ்ரீஸ்வாமிஜி புஷ்பகிரியின் நடுவிலிருந்தாற் போலிருந்தது. இவ்வைபவத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டின் மூலை முடுக்கிலிருந்தும், பிற மாநிலங்களில் இருந்தும், பல அன்பர்கள் கடும் மழையையும் பொருட்படுத்தாது வந்து உற்சாகமாக கலந்து கொண்டனர். கலந்து கொள்ள பாக்யம் பெற்ற ஒவ்வொரு அன்பருக்கும் தம் திருக்கரங்களாலேயே ஸ்ரீஸ்வாமிஜி பிரசாதம் வழங்கினார்கள்.

இந்த வைபவம் உலகெங்கிலும் நமது அனைத்து ஸ்தாபனங்களிலும் நாமத்வார்களிலும் சத்சங்கங்க மையங்களிலும் மிகுந்த உற்சாகமுடனும் அன்புடனும் கொண்டாடப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபதேசங்களின்படி ஊக்கமுடன் செயல்படும் பக்தர்கள் தாமாகவே சத்சங்கம், நாமகீர்த்தனம், பொதுநல சேவை ஆகியவற்றில் வெகுவாக ஈடுபட்டிருந்தனர். இது குறித்து தகவல்கள் வந்தவண்னமாய் இருக்கின்றன. ஸ்ரீஸ்வாமிஜி அனைத்து தகவல்களையும் அறிந்து மிகவும் நெகிழ்ந்து போனார்கள். இதில் எவ்விதத்திலும் பங்கு கொண்ட அனைத்து அன்பர்களுக்கும், அவர்தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தாம் பகவானிடம் சிறப்பான பிரார்த்தனையை செய்வதாக ஸ்ரீஸ்வாமிஜி தெரிவித்திருக்கிறார்கள். நாமத்வார் மற்றும் ஆஸ்ரமத்தின் சார்பாக தங்களனைவரது குருபக்தி, தூய்மை, நல்லுள்ளம், விசுவாசத்திற்காக எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.


ராதே ராதே!

என்றும் குருநாதர் பணியில்

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

**Personal Secretary to HH Sri Sri Muralidhara Swamiji**

PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பலரும் தங்களுக்கு கஷ்டம் வருகையில், அதை தீர்த்து கொள்வதற்காக, மஹான்களை தேடி செல்கின்றனரே. இது எவ்விதத்தில் சரி ஆகும்?

பதில்: சாதாரணமாக ஒரு விஷயம் சமுதாயத்தில் ஊறிப்போய் இருக்கின்றதென்றால், அது பல காலமாக பின்பற்றப்பட்டு வந்திருக்கும் என்று தெளிவாகிறது. இன்று மக்கள் தங்கள் கஷ்டங்களுக்காக, மஹான்களை தேடி போகின்றனர் என்பதே நம் பாரத தேசத்தில், பன்னெடுங்காலமாக மஹான்களும், சித்தபுருஷர்களும் இருந்துள்ளனர் என்பதற்கு சாட்சி. அது மட்டுமல்லாமல் அப்படி சென்ற மனிதர்களுக்கு கஷ்டம் தீர்ந்து வந்துள்ளது என்பதினால்தான், இந்த பழக்கம் இன்று வரை அப்படியே இருந்து வருகின்றது என்றும் தெரிகின்றது.

மரணத்தை பற்றிய முழுமையான அறிவு யாருக்கு உள்ளதோ, அவன்தான் மரணத்தை கண்டு பயப்பட மாட்டான். - மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

எந்த ஒரு பூஜை செய்ய ஆரம்பித்தாலும், அந்த பூஜை எந்த தடையும் இல்லாமல், பூர்த்தியாக வேண்டும் என்பதற்காக, நாம் ஆரம்பத்தில், கணபதி பூஜை செய்வது வழக்கம். விநாயக சதுர்த்தி அன்று, கணபதி பூஜை செய்ய ஆரம்பிக்கும்பொழுது, அந்த விநாயக சதுர்த்தி பூஜை தடையில்லாமல் நடப்பதற்கு, ஆரம்பத்தில், ஒரு குட்டி கணபதி பூஜை செய்வது வழக்கம். அதுபோல் தியானம் செய்தால்தான், பகவானுடைய அருளை பெற முடியும். அந்த தியானமும், தொடர்ந்து தடையில்லாமல் செய்வதற்கும், முதலில், பகவானுடைய அருளை பிரார்த்திக்க வேண்டும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 6

-ஸ்ரீ ஸ்வாமிஜி

18



பிரம்மா நாரதரிடம் தொடர்ந்து கூறுகிறார். (சென்ற இதழ் தொடர்ச்சி...) லோகமயமான புருஷனை வர்ணித்த பிரம்மா மேலும் தொடர்கிறார். விராட் ஸ்வரூபமாக உள்ள பகவானுடைய திருவாயிலிருந்து வாக் இந்த்ரியமும், அதற்கு தேவதையான அக்னியும் தோன்றுகிறார்கள். அவருடைய மேனியை உண்டாக்கும் ஏழு தாதுக்கள் (தோல், ரத்தம், மாம்ஸம், தேஜஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்லம்) சந்தஸ்ஸிற்கு (காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தீ, த்ருஷ்டுப், ஜகதி) உற்பத்தி ஸ்தானமாகிறது. தேவர்களின் ஹவிஸ்ஸூம், பித்ருக்களின் அன்னமும், மனிதர்களுடைய அன்னமும், ஆறு ரஸங்களும், ரஸனேந்த்ரியமும், அதன் தேவதையான வருணனும், விராட் புருஷனின் நாக்கிலிருந்து தோன்றுகின்றன.

எல்லோருடைய பிராணனிற்கும் அதற்கு அதிஷ்டான தேவதையான வாயுவிற்கும் அந்த புருஷனின் மூக்குகள் உற்பத்தி ஸ்தானம். அவருடைய கர்மேந்த்ரியம் அஸ்வினி தேவதைகளுக்கும், ஔஷதிகளுக்கும், கந்தம் இவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம் ஆகும். வர்ணங்களும் அவைகளை ப்ரகாசிக்க செய்கின்ற ஒளியும் அந்த விராட் புருஷனின் சக்ஷுர் இந்திரியமும், சுவர்கம் மற்றும் சூரியன் இவைகளுக்கு அவரது கண்களும் உற்பத்தி ஸ்தானம். அவரது காதுகள் திசைகளுக்கும் தீர்த்தங்களுக்கும், அவரது ஸ்ரோத்ரேந்த்ரியம் ஆகாயம் மற்றும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமாகும். வஸ்துக்களில் உள்ள சாராம்ஸங்களுக்கும் அழகிற்கும், அவரது திருமேனி இருப்பிடமாகிறது. அவருடைய தோல் ஸ்பரிஸத்திற்கும் காற்றிற்கும் மற்றும் எல்லா யாகங்களுக்கும் ஸ்தானமாகிறது.

யாகங்கள் எந்த மரம், கொடிகள் இவைகளால் நன்கு முடிக்கப்படுகின்றதோ, அந்த மரம் செடி கொடி, இவற்றிற்கு



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

அவரது ரோமங்கள் இருப்பிடம். அவருடைய கேசங்கள், மீசை, நகங்கள் இவை முறையே மேகம், மின்னல் மற்றும் கற்கள், உலோகங்கள் இவற்றிற்கு இருப்பிடம். லோகபாலகர்களுக்கு விராட் புருஷனின் கைகளும், அவருடைய திருவடி, க்ஷேமத்திற்கும் அபயத்திற்கும் இருப்பிடம். அவரது நடை, மூவுலகிற்கும் ஆதாரமாகிறது. வேண்டியது அனைத்தும் அளிப்பதற்கு அவரது திருவடிகளே ஆஸ்பதம். ஜலம், சுக்லம் உற்பத்திக்கும் மழை தரும் மேகங்கள், பிரஜாபதி இவை அனைத்திற்கும் விராட் புருஷனுடைய ஆண் குறி அதிஷ்டானம். அவருடைய உபஸ்தம் என்ற இந்திரியம் ஸம்போகானந்தத்திற்கு அதிஷ்டானமாகிறது.

நாரத! யமனுக்கும் மித்ரனுக்கும், மல விசர்ஜனத்துக்கும் அவருடைய பாயு என்ற இந்திரியம் அதிஷ்டானமாகிறது. ஹிம்சை, அமங்களம், ம்ருத்யு மற்றும் நரகத்திற்கு குதம் என்ற இந்திரியமும், அவமானம், அதர்மம் மற்றும் அறிவில்லாமைக்கும் ப்ருஷ்ட பாகமும் ஸ்தானமாகிறது. நதிகளுக்கு அவரது நரம்புகளும், மலைகளுக்கு அவரது எலும்புகளும் உற்பத்தி ஸ்தானமாகிறது. சமுத்திரம், பிரதானம், அன்னாதி ரஸங்கள், பிராணிகளுடைய தோற்றம் மற்றும் மரணம் இவற்றிற்கு எல்லாம் விராட் புருஷனின் வயிறு ஸ்தானம். அவரது ஹ்ருதயம் ஜீவன்களின் லிங்க சரீரத்திற்கு ஸ்தானமாகிறது.

அந்த பரமபுருஷனுடைய சித்தமானது தர்மத்திற்கும், எனக்கும், உனக்கும், சனகாதிகளுக்கும், ஸ்ரீருத்ரனுக்கும், விஞ்ஞானத்திற்கும், ஸத்வ குணத்திற்கும் ஸ்தானமாகிறது. நாரத! உண்மையில் நானும், நீயும், ருத்ரனும், சனகாதிகளும், மரீசி முதலிய முனிவர்களும், தேவர்களும், அசுரர்களும், மனிதர்களும், யானைகளும், பறவைகளும், மிருகங்களும், பாம்புகளும், கந்தர்வ, யக்ஷ, அப்ஸரஸ்களும், ராக்ஷஸ மற்றும் பூத கணங்களும், பித்ருக்களும், ஸித்தர்களும், சாரண வித்யாதரர்களும், மேலும் ஜலம், தரை, ஆகாயம் இவற்றில் வஸிக்கின்ற அனைத்து ஜீவர்களும், கோள்களும், நட்சத்திரங்களும், வால் நட்சத்திரங்களும், மின்னலும், மேகங்களும், நிகழ்ந்ததும், நிகழப் போவதும், நிகழ்ந்துகொண்டு இருப்பதுமான யாதொன்று உண்டோ இவை எல்லாம் அந்த விராட் புருஷனே.


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

அந்த விராட் புருஷனால் இந்த முழு பிரபஞ்சமும் மறைக்கப்பட்டிருக்கிறது. வாஸ்தவத்தில் அவருடைய விராட் ரூபம் இத்தனை சிருஷ்டியையும் தாண்டி வியாபித்து இருக்கிறது. எப்படி சூரியனானது தானும் பிரகாசித்து மற்றவைகளையும் பிரகாசிக்கச் செய்கின்றதோ, அதேபோல், இந்த பரமபுருஷனும் விராட் ரூபத்தை பிரகாசிக்கச் செய்துகொண்டு பிரம்மாண்டத்திற்கு உள்ளிலும், வெளியிலும் பிரகாசிக்கின்றார்.

மரணம் மற்றும் கர்மா இவற்றிற்கு உட்பட்ட அனைத்தையும் அவர் தாண்டியிருக்கின்றார். அக்காரணத்தாலேயே அவர் அந்த பயமே இல்லாத ஆனந்தமயமான (மோக்ஷமெனும்) பதத்திற்கு ஈஸ்வரனாக இருக்கிறார். இதனாலேயே அவரது மகிமையானது ஆழம் காண முடியாததாக இருக்கிறது.

(கனியும்)

---

## சனாதனப்புதிர் பகுதி 67 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

**1.** முத்துஸ்வாமி தீக்ஷிதர் பல கீர்த்தனங்களை இயற்றி இருக்கிறார்கள். அவர்களால் செய்யப்பட்ட ஸ்லோகம் எது?

**2.** ஸ்ரீமாதவி வனேஸ்வரர் - ஸ்வயம்பூ - லிங்க வடிவில் இருக்கும் க்ஷேத்ரம் என்ன? விசேஷம் என்ன?

**3.** தௌம்யாசாரியார், வனத்தில் தர்மபுத்ரருக்கு எந்த தெய்வத்தின் **108** பெயர்களை உபதேசித்தார். அதன் மூலமாக கிடைத்தது என்ன?

**4.** இந்திரன் செய்த, ப்ரம்ம தேவர் செய்த அகிலாண்டேஸ்வரி ஸ்தோத்திரங்கள் எங்கே காணப்படுகிறது?

**5.** ஏரண்டபுரம், பில்வாரண்யம் - இவை எந்த ஊரை குறிப்பிடுகிறது?

**6.** கும்பகோணம் மஹிமையை எந்த புராணம் விரிவாக கூறுகிறது?

**7.** ''பாலாம்பிகே மயி நிதேஹி க்ருபா கடாக்ஷம்'' என்று முடியும் **10**ஸ்லோகங்கள் எந்த புராணத்தில் காணப்படுகின்றன?

**8.** பாகவதம் - **5**வது ஸ்கந்தத்தின் விசேஷம் என்ன?

**9.** ரிஷப தேவர், ஜடபரதர் இவர்களின் சரித்திரங்கள் பாகவதத்தில் எந்த ஸ்கந்தத்தில் காணப்படுகிறது?

**10.** நாராயண பட்டத்திரி நாராயணீயத்தை என்று எழுதி முடித்தார்? அப்பொழுது பட்டத்திரியின் வயது என்ன?



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# சத்சங்கம்

- ஸ்ரீபத்மபாதர்

உலகில் உள்ள உயிரினங்களில், மனிதன் மட்டும்தான் குறுக்காக வளராமல் நெடுக்க வளருகின்றான். அதன் மூலமாகவே, அவன் மற்ற ஜீவராசிகளைக் காட்டிலும் வித்யாசமாக உள்ளவன் என்பதை, பகவான், அவனை நெடுக்க வளரும்படி படைத்ததில் இருந்தே, உணர்த்துகின்றான். இதற்கு முன் நாம் எடுத்துள்ள மனிதர்கள் அல்லாத பிறவிகளிலும், மற்றும் மனிதப்பிறவிகளிலும், நாம் செய்துள்ள பாவங்களைப் போக்கிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் விதமாகவே இந்த மனிதப்பிறவி அளிக்கப்பட்டுள்ளது. வேறு எந்தப்பிறவியிலும் ஒரு ஜீவன் தன் பாவங்களைப் போக்கிக்கொள்ள, வாய்ப்பே கிடையாது.

ஒரு மனிதன் இறக்கும் தருவாயில், அவன் உடலில் இருந்து சூக்ஷ்ம சரீரம் பிரிந்து, அதனுடைய புண்ணிய பாவத்திற்கு தகுந்தாற்போல், மறு உலகங்களுக்குச் சென்று, மீண்டும் பூவுலகில் ஒரு பிறவியை அடைகின்றது. இது எப்படி என்பதை, ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம்.

ஒரு பறவையின் முட்டையை உடைத்து பார்த்தால், அதில் கரு இருப்பதை பார்க்கலாம். அதே முட்டையை பறவை அடை காத்து வரும். ஆனால் தகுந்த காலத்தில், அதிலிருந்து குஞ்சு, முட்டையை தானே உடைத்துக்கொண்டு வெளியே வந்து பறந்து செல்கின்றது. தகுந்த காலத்தில், பறவை, தான் இருந்த முட்டை ஓட்டை உதறிவிட்டு செல்வது போல, ஒரு ஜீவனுடைய ப்ராரப்தம் முடியும்பொழுது ஜீவன், ஸ்தூல சரீரத்தை உதறிவிட்டு கிளம்பி விடுகின்றது.

நம் பாவங்களை போக்கிக்கொள்ளவும், புண்ணியங்களை சம்பாதித்துக் கொள்ளவும் ஸத்சங்கம் மிகவும் உதவுகின்றது. அதோடு மட்டும் அல்லாமல், நமக்கு நம்மை அறியாமலேயே ஞான, பக்தி, வைராக்யத்தை கொடுத்து விடுகின்றது.

ஸாதுக்களின் ஸங்கத்தின் மேன்மையை, பல புராணங்களும் மஹான்களும் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஸ்ரீமத்



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

பாகவதத்தில் நவயோகி உபாக்யானத்தில் ஒருவருடைய ஜன்மாவில் அரைக்ஷணம் ஸாதுக்களுடைய ஸங்கம் கிடைப்பது அரிதானது என்று சொல்லியுள்ளது. ஆதிசங்கரரும் பஜகோவிந்தத்தில், "ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்" என்கின்றார். பலர்கூடி பாகவதம் பாராயணம் செய்வதும், பாகவதம் சொல்வதும், கேட்பதும், நாமகீர்த்தனம் செய்வதும் பகவானைக் கொண்டாடுவதும் ஸத்ஸங்கம்தாம். ஆனால், இவைகள் எல்லாம் ஒரு மஹாத்மாவை முன்னிட்டுக்கொண்டு நடத்துவதுதான் உண்மையான ஸத்ஸங்கம். ஏன் என்றால், அரைகுறை நம்பிக்கையுடன், ஆயிரம்பேர் கூடியிருப்பதைக் காட்டிலும், த்ருட விசுவாசத்துடன் கூடிய பகவத் அநுபவம் உடைய ஒரு மஹாத்மா வேண்டும்.

ராமருடன் வனவாசத்திற்கு கிளம்பிய அயோத்தி மக்கள், ராமர் இரவு கிளம்பிவிட்டார் என்று தெரிந்தவுடன் திரும்பிவிட்டனர். மீண்டும் அவர்களுக்கு ஸ்ரீ ராமரைப் போய் பார்க்க வேண்டும் என்ற எண்ணம், வரவில்லை. ஒரு பரதன் புறப்பட்டானானால் அவன்பின் செல்வதற்கு தயாராக உள்ளனர். பரத்வாஜ மஹரிஷி ஆஸ்ரமத்தில் அளிக்கப்பட்ட விருந்தில், அயோத்தி மக்கள் மயங்குகின்றனர். நன்றாக உறங்கவும் செய்கின்றனர். ஆனால், பரதனோ உறங்கவும் இல்லை. மயங்கவும் இல்லை. அயோத்தி மக்கள் சாதாரண பக்தர்கள். பரதன் மஹா பக்தன். அதுபோல், நம்மை எல்லாம் நல்ல விஷயத்திற்கு கட்டி இழுத்து செல்ல ஒரு மஹாத்மா வேண்டும். இல்லை என்றால், நாம் T.V. பார்த்துக்கொண்டு, வம்புபேசி, தூங்கி, வீண் பொழுது போக்கிக்கொண்டு உட்கார்ந்து விடுவோம். சத்சங்கத்தினால், முதலில் நமக்குக் கிடைக்கும் கண்கண்ட பலன், ஸத்ஸங்கத்தில் இருக்கும் நேரம் நாம் பாவம் செய்யாமல் இருப்பதே ஆகும். மனதும் கூட தவறான விஷயங்களை சிந்தனை செய்யாமல் இருக்கின்றது. தாமஸ வாசனைகள், சிறிது அப்யாசத்தினாலேயே வேரூன்றிவிடும். ராஜஸ வாசனைகள், சற்று கூடுதலான அப்யாசத்தினால் வேரூன்றிவிடும். ஸாத்வீக வாசனைகள், அவ்வளவு எளிதில் மனதில் ஏறாது.

உதாரணமாக மதுபானம், சூதாட்டம் இவைகளை பழக்கிக் கொண்டவர்கள், அது இல்லாத பொழுது, பரபரப்புடன்


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

நிலைகொள்ளாமல் தவிக்கின்றனர். இது தாமஸ வாசனை ஆகும். Office, வருமானம், விளையாட்டு, Social, ஊர்சுற்றுதல் இவைகள் ராஜஸமாகும். இவைகள் இல்லாதபொழுதும் தவிக்கின்றனர். ஆனால் பல நாட்கள், பூஜை, ஜபம், தியானம், கதாச்ரவணம் என்று இருந்தவர்கள் அது கிடைக்காதபொழுது பரிதவித்து ஏங்குவதைப் பெரும்பாலும் நாம் பார்ப்பதில்லை. ஸாத்வீக வாசனைகள், அவ்வளவு எளிதில் மனதில் பற்றுவது இல்லை என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

மனது இதுவரையில் கழுதை, குதிரை, யானை, ஒட்டகம், ஈ, எறும்பு என்று எல்லா சரீரத்திலும் வந்துள்ளது. இப்பொழுது பாக்ய வசத்தால் மனித சரீரத்திற்குள் புகுந்துள்ளது. இதை சரியாக பயன்படுத்தி கொள்ளாவிடில், மீண்டும் பழைய நிலையே ஏற்படும். வேலை, குடும்பம் எல்லாம் விட்டுவிட்டு ஒருவன் ஆன்மீக வாழ்க்கைக்கு வருவதே, நேரத்தை சிறிதும் வீணாக்காமல் சாதனை செய்வதற்கே. இப்படி வந்தும் வேலை, வியாபாரம் என்று கிளம்பினால், அவன் மனதில் இறை நாட்டம் இல்லை என்றே பொருள் ஆகும். ஸத்ஸங்கமே ஒரு ஜீவனுக்கு கிடைக்கக்கூடிய மிகப்பெரிய லாபம்.

பல மஹான்களுடைய பாட்டைப் பாடலாம்; விதம் விதமாய் நடைபோட்டு ஆடலாம்; பல உதாரணங்கள் சொல்லி கதை சொல்லலாம். ஆனால் இதயத்தில் ப்ரேமையுடன் கூடிய **பா**வம் இல்லாவிடில், ஒரு பயனும் விளையப் போவதில்லை. ஸத்ஸங்கத்தின் காரண புருஷரான மஹாத்மா, நம் உலக வாழ்க்கையில் ஏற்படும் எவ்வளவோ சிரமங்களை அவர் அருள் மூலமாக நீக்கி வைக்கலாம். ஆனால், அதற்காகத்தான் ஸத்ஸங்கம் என்று ஆகிவிடாது.

ப்ராரப்தம் என்பது வலிமையானது. அதன்படிதான் ஒவ்வொரு ஜீவனுடைய வாழ்க்கையும் அமையும். இருந்த போதிலும், நாம் வாழ்க்கையில் நல்ல செயல்களை செய்யும்பொழுது, பகவான், நாம் மேலும் மேலும் நல்ல செயல்களை செய்ய வேண்டும் என்று ஊக்குவிப்பதற்காக, ஏதோ ஒருவிதத்தில் நமக்கு அருளவும் செய்கின்றார்.

அப்படி என்றால் எதற்கு பூஜை, பஜனம், கதை, உத்ஸவம், தியானம் எல்லாம்? ஜோதிடம் பார்ப்பவர் போலவோ, அருள்வாக்கு சொல்பவர் போலவோ, ஒரு token


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

கொடுத்து அவர்களுடைய கஷ்டத்தைப் கேட்டு, அதற்கு ஒரு பதிலோ, பரிகாரமோ சொல்லிவிட்டுப் போய்விடலாமே! அதற்காக இல்லை ஸத்ஸங்கம். நம் பெற்றோர்கள் ஆஸ்தீகர்களாக இருக்கலாம். நமக்கு குழந்தையிலிருந்தே நல்ல வழி காட்டியிருக்கலாம். ஆனால், ஸத்ஸங்கத்திற்கு வரும்வரையில் பகவான் யார் என்றே தெரியாது. முக்தி என்றால், என்னவென்றே தெரியாது. முக்தியை ஏன் அடைய வேண்டும் என்றும் தெரியாது. அதற்கான வழி எதுவுமே தெரியாது. ஸத்ஸங்கம்தான் நமக்கு இவைகளை எல்லாம் தெளிவுபடுத்தியது. ஸத்ஸங்கத்திற்கு வந்து இவ்வளவு நாள் என்ன பலன் அடைந்தேன் என்று கேள்வி எழும்?

கணக்கற்ற முறைகள் ராமாயணம், பாகவதம் பாராயணம் செய்தது, கணக்கற்ற முறை கதைகள் கேட்டது, நாமகீர்த்தனம் செய்தது, தீர்த்தயாத்திரை, புண்ணிய க்ஷேத்திரங்களின் தரிசனம், நாமஜபம், இவைகள் எல்லாம் நம் உள்ளே சென்றிருக்கின்றதே! இதுதான் பலன். இவைகள் ஏன் உனக்குத் தெரியவில்லை என்றால், இத்தகைய பெரிய காரியங்களைச் செய்கின்றோம் என்றுகூட தெரியாமல், விளையாட்டாக ஸத்ஸங்கம் உன்னை செய்ய வைத்துவிட்டது. அதுதான் உண்மை.

பக்குவம் இருந்தால், இந்தப் பிறவியிலேயே முக்தியைப் பெறுவாய். இல்லாவிட்டால், ஸத்ஸங்கத்தின் மூலமாக உள்ளே ஏற்றிவிடப்பட்ட நல்ல வாசனைகள், உன்னை சும்மா இருக்கவிடாது. வரக்கூடிய பிறவிகளிலே, உன்னை மேலும் மேலும் இவ்விஷயங்களில் தூண்டி, வெகுசீக்கிரத்தில் முக்தி அடையச் செய்யும். ஏக்கமும் பக்குவமும் இருக்குமானால், ஸத்ஸங்கத்தினாலேயே கடவுளைக் காணலாம். நம் சாஸ்திரங்கள் எல்லாம் வம்சத்தை விருத்தி செய் என்று எதற்காகச் சொல்கின்றது என்பதை, நாம் புரிந்துகொள்ள வேண்டும். பாவங்களைக் கழிப்பதற்காக எவ்வளவோ ஜீவன்கள் மனிதப் பிறவிக்காக ஏங்கித் தவிக்கின்றன. அவைகளுக்கு, உன் மூலமாக, ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதால், சாஸ்திரங்கள் நம்மை பிள்ளை குட்டிகளை பெற்றுக் கொள்ளச் சொல்கின்றது. ஸத்ஸங்கத்தைப் போல, ஒரு ஜீவனுக்கு பரம உபகாரம் செய்யக் கூடியது வேறு எதுவும் கிடையாது.


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# ஞானியின் சன்னிதி

- ஸ்ரீஸ்வாமிஜி

ஜீவன் முக்தனான ஞானி, எந்த செயலும் செய்ய மாட்டான். வெளிப்புற செயல்கள் மட்டும் அல்ல. எந்த அதிசயங்களை கூட நிகழ்த்த மாட்டான். எப்பொழுதும் தனக்குத்தானே ரமித்து கொண்டிருப்பான். அவனால் உலகத்திற்கு ஏதாவது பலன் உண்டா? சற்று யோசிப்போம்.

ஒரு தம்பதிகளுக்கு, திருமணம் நடந்து வெகு நாட்கள் குழந்தையில்லை. கோவில் கோவிலாக சென்று பிரார்த்தனைகள் செய்து விரதம் இருந்து, ஒரு குழந்தை பிறந்தது. அந்த குழந்தையைக் கொஞ்சி கொஞ்சி, அன்புடன் வளர்த்தார்கள். வாலிப வயதை அடைந்த அவன் எதிர்பாராதவிதமாக இறந்து விடுகின்றான்.

பெற்றோர்களால், புத்திர சோகத்தை தாங்க முடியவில்லை. அவர்கள், தங்களை தாங்களே மாய்த்து கொள்ளலாமா? என்று பார்க்கின்றார்கள். தூக்கம் வரவில்லை. மனோதத்துவ மருத்துவர்களை பார்க்கின்றார்கள். தூக்க மாத்திரை சாப்பிட்டும் தூக்கம் வரவில்லை.

ஜோதிடம் பார்க்கின்றார்கள். கோவிலுக்கு செல்கின்றார்கள். தீர்த்த யாத்திரை செய்து பார்க்கின்றார்கள். ஏன்? ஏன்? இப்படி நிகழ்ந்தது என்று பார்த்தவர்களை எல்லாம் கேட்கின்றார்கள். ஒன்றும் பலன் இல்லை. இறந்தவர்கள் போல் நடமாடுகின்றார்கள்.

அப்பொழுது பாக்யவசத்தால், ஒரு ஜீவன் முக்தன் இருக்கும் இடத்திற்கு வருகின்றார்கள். அவன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. எதையும் காதில் போட்டுக்கொள்ளவும் இல்லை. ஆனால் என்ன ஆச்சரியம்?

அவர்கள் முதலில், தன்னை அறியாமல் அமைதியை உணர்ந்தார்கள். சிறிது நேரம் கழித்துத்தான், அவர்களுக்கே தாங்கள் அமைதியாக இருக்கின்றோம் என்று நினைவுக்கு வந்தது. 'நாம் புத்ரனை பறி கொடுத்து விட்டு இருக்கின்றோம். இப்படி அமைதியாக இருக்க கூடாது. துக்கமாக இருக்க வேண்டும்' என்று துக்கத்தை வரவழைக்க பார்க்கின்றார்கள்.



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

முடியவில்லை. என்ன விந்தை அது? அந்த அமைதியே ஆனந்தமாக உள்ளது!!

இதை, ஜீவன் முக்தனான ஞானியை தவிர, வேறு யாரால், அருள முடியும்? அப்படி என்றால்' ஜீவன் முக்தன் சன்னிதியில், பெரும் சோகம் அடைந்தவர்கள்தான் அமைதியையும் ஆனந்தத்தையும் உணர முடியுமா?

அப்படியல்ல. அதிகமாக தாகம் எடுத்தவனுக்கும் தண்ணீர் மறுக்கப்பட்டவனுக்கும்தான் நீரின் அருமை தெரியும்! அதற்காக, நீர் இல்லாமல், எந்த ஜீவராசியாவது வாழ்ந்து விட முடியுமா என்ன? நமக்கும் அந்த ஜீவன் முக்தன் சன்னிதி மாத்திரத்தில், ஆனந்தமும் அமைதியும் ஏற்படுகின்றது. நாம், சிறு சிறு சிற்றின்பங்களில் மூழ்கி இருப்பதால், அதை முழுமையாக உணர முடியவில்லை.

எது ஒன்று, முழுமையானதாக வேண்டும் என்று முழுமனதுடன் தேடுகின்றாயோ, அப்பொழுதுதான் அது முழுவதுமாக உனக்கு கிடைக்கும்! எப்பொழுது ஒரு விஷயம் நமக்கு தேவைப்பட்டு அதை தேட ஆரம்பிக்கின்றோமோ அப்பொழுதுதான் அது கிடைத்தாலும் கூட நம்மால் முழுமையாக அதை உணர முடியும்!!


ஸ்ரீகிருஷ்ண லீலா தரங்கிணி மஹோத்ஸவம்

**இடம்: ஸ்ரீநாராயண தீர்த்தர் அதிஷ்டானம், திருப்பூந்துருத்தி**

**தேதி: டிசம்பர் 13 முதல் டிசம்பர் 15 வரை**

திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயண தீர்த்தர் அதிஷ்டானத்தில் ஸ்ரீராதாஸமேத ஜகன்மோஹன க்ருஷ்ணனுடைய க்ருபையை முன்னிட்டு

**மருதாநல்லூர் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகள் மற்றும்**

**பரனூர் மஹாத்மா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

தலைமையில் பாகவதோத்தமர்களாலும் சத்சங்க பக்தர்களாலும்

**ஸ்ரீக்ருஷ்ண லீலாதரங்கிணி** மற்றும்

**ஸ்ரீருக்மிணி கல்யாண வைபவம்** நடைபெறும்.

பாகவதோத்தமர்கள் அனைவரும் கலந்து கொண்டு குருநாதன் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டு கொள்கிறோம்.

இப்படிக்கு
பாகவத பாத தூளி, சட்டநாத பாகவதர்
ஸ்ரீப்ரேமிக வரதன் பஜன் மண்டலி





PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# வீடு தேடி வருவான் விட்டலன் - 9

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

ஓடி வந்த புண்டலீகன் பகவானின் கால்களில் விழுந்து, கண்ணா! உன்னிடம் நான் அபசாரப்பட்டு விட்டேன். நீயோ வைகுண்டபதி! உபநிஷத்தின் சிகரம் நீ! உன் கால் நக தரிசனம் கிடைக்காதா என்று யோகிகளும், முனிவர்களும் கோடிக்கணக்கான வருடங்கள் கடும் தவம் செய்கின்றனர். உன்னைப் போய், ஒரு குடிசை வாசலில், ஒரு சாதாரண செங்கல் மேல் நிற்க வைத்து விட்டேன். நான் ஒரு அபராதி. என்னை மன்னித்தருள வேண்டும் என்று சொல்லி தன்னை மன்னிக்க வேண்டினான். புண்டலீகனைத் தொட்டு மேலே தூக்கினான் பகவான். அவனை ஆலிங்கனம் செய்து கொண்டான் பகவான்.

கண்ணன் “புண்டலீகா! நான் மிகவும் திருப்தி அடைந்தேன். நான் ஒரு ராஜா. என்னுடன் நாரதர் வந்திருக்கிறார். நான் தெய்வம் என்பதும் உனக்குத் தெரியும். என்னுடன் இங்கு ஆயிரம் ஜனங்கள் கூடி விட்டனர். ஒரே ஆரவாரம். இத்தனை இருந்தும், நீ உன் மாதா பிதாக்களுக்கு செய்யும் சேவையை விடாமல் இருந்தாய். என்னையும் நீ உன் மனதில் அலட்சியம் செய்யவில்லை. ஒருக்கால் நீ என்னை கவனிப்பதில் ஈடுபட்டு, உன் தாய், தந்தையரை கவனிக்காமல் இருந்திருந்தால், உன் மேல் எனக்கு இவ்வளவு திருப்தி வந்திருக்காது. நான் மிக்க சந்தோஷப்படுகிறேன்” என்றான்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுபாவம். பகவானுக்கு வரம் தருவது சுபாவம். “புண்டலீகா! நீ வேண்டும் வரம் கேள்” என்றான் கண்ணன்.

புண்டலீகன் தவம் செய்யவில்லை. தானம் செய்யவில்லை. மந்திரம் ஜபிக்கவில்லை. குரு சொல்படி மாதா, பிதாக்களுக்கு சேவை செய்தான். குரு சொல்லை கேட்டு மாதா, பிதாக்களுக்கு சேவை செய்ததற்கு பலன் வந்திருக்கிறது. பலனாக பகவானின் தரிசனம். தரிசனம் தந்த பகவான், “வரம் கேள்” என்கிறான். என்ன வரம் கேட்பது என்று யோசித்தான் புண்டலீகன்.


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

புண்டலீகன் : புண்டலீகன் என்றொருவன் காசி யாத்திரை கிளம்பினான். குக்குட மகரிஷி சொல்படி சந்திரபாகா நதிக்கரையில் ஒரு குடிசை போட்டு மாதா, பிதாக்களுக்கு சேவை செய்தான். இதை நாரதர் மூலம் கேள்விப்பட்ட பகவான், பண்டரீபுரத்திற்கு அவன் குடிசை முன் வந்து, ஒரு செங்கலின் மேல் நின்றான். இது யுகம் யுகமாக எல்லோருக்கும் தெரிய வேண்டும்.

கண்ணன் : எப்படி தெரிய வைப்பது?

புண்டலீகன் : நீ இப்படியே இந்த செங்கலின் மேல் நின்று விடு.

பகவானுக்கு அது ஒன்றும் கஷ்டமில்லை. அவன் உடம்பில் இருந்தும், ருக்மிணியிடமிருந்தும் ஒரு திவ்ய மங்கள விக்ரஹம் வெளியில் வந்தது. அது அப்படியே அந்த செங்கலின் மேல் நிற்க, கண்ணன் ருக்மிணியுடன் துவாரகைக்கு கிளம்பி போய் விட்டான். அன்று கண்ணன் உடம்பில் இருந்து வந்த மூர்த்தி தான் இன்றும் பண்டரீபுரத்தில் இருக்கிறது. இது சிற்பி வடித்த சிலை அல்ல. பகவானின் திருமேனியில் இருந்து வந்த ஒரு சின்மயமான மூர்த்தி. இந்த கோயில் இருக்கும் இடத்தில் தான் புண்டலீகனின் குடிசை இருந்தது. பகவான் நின்ற இடமும் மாறவில்லை. பின்னால் இந்த இடத்தில் கோயில் வந்து விட்டது.

பகவான் வந்தபிறகு புண்டலீகன் கிளம்பி போகவில்லை. சந்திரபாகா நதிக்கரையில் தன் காலம் முடியும் வரை வாழ்ந்தான். நதிக்கரையில் இன்றும் புண்டலீக மந்திர் என்று அவன் சமாதியும், மாயா பாபா மந்திர் என்று அருகில் அவன் தாய், தந்தை சமாதியும் இருக்கிறது. இந்த புண்டலீகனுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற பகவானும் அந்த இடத்தில் இன்றும் நின்று கொண்டு இருக்கிறான்.

(தொடரும்)

Whilst the entire world tried to explore into the object, our ancient Rishis alone explored into the subject .

- Maharanyam Sri Sri Muralidhara Swamiji



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

## அன்னகூடோத்ஸவம்

புனித புரட்டாசி கன்யா மாதத்தில் சனிக்கிழமைகளில் திருமஞ்சனம், திருப்பாவாடை உத்ஸவம், தினைதீப வழிபாடும் புறப்பாடும் கண்டருளிய ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாளை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து அருள் பெற்றனர். அக்டோபர் 11 கடைசி சனிக்கிழமையன்று "ஸ்ரீநிவாசனை கொண்டாடு" என்று ஸ்ரீஸ்வாமிஜி அருளிச் செய்தது போல், மாலையணிந்து விரதமிருந்து வந்த ஏராளமான பக்தர்களின் மஹாமந்திர கோஷத்துடன், பல்வேறு வாத்யங்களுடன் பெருமாள் ஆடியாடி அசைந்து பவனி வர, அன்னகூட உத்ஸவம் நமது ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில், பலவித அன்ன, பழ பக்ஷணங்களுடன், பரிமள புஷ்ப வஸ்த்ர ஆபரணங்களுடன் நடைபெற்றது. அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் திரு.பம்மல் பாலாஜி, அகண்ட தீப வழிபாடு செய்து, கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். பக்தர்கள் அனைவருக்கும், ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களால் லட்டு ப்ரசாதம் வழங்கினார்கள். மகாப்ரசாதம் வந்திருந்த சுமார் 3000க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

## *பாலகர்களுக்கு ஒரு கதை*



# *பெரிய குணம் சிறிய செயல்*

ஒருவர் அன்னபூரணி அன்னதான கூடம் எனும் பெரிய சத்திரம் ஒன்றை நடத்தி கொண்டிருந்தார். சுவையாக சமைத்து அன்புடனும், ஆசையுடனும் அனைவருக்கும் தாராள மனதுடன் அந்த செல்வந்தர் ஒரு உயரிய சேவை ஆற்றி கொண்டிருந்தார். அவருக்கு வயதாகி கொண்டிருந்தபடியால், இந்த அன்னதான கூடத்தை பார்த்து கொள்ள ஒருவர் தேவை என ஆசைப்பட்டார். அந்த பொறுப்பு ஒரு நல்ல மனிதரிடம் சென்றடைய வேண்டுமே என அவருக்கு கவலை இருந்தது. அவருக்கு ஒரு இளைய சகோதரர் உதவியாக இருந்தார்.

அவர், "எல்லோரையும் நேரிலேயே சந்தித்து அவர்களிடம் விஷயத்தை சொல்லி அவர்கள் என்ன பதில் சொல்கிறார்களோ அதைக்கொண்டு முடிவு எடுப்போம்" என்றார். ஆனால் அதில் மூத்தவர் ஆர்வம் காட்டவில்லை. பல சமயங்களில், இது போன்ற நேர்காணலில், மனிதர்கள் சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருக்குமென்று அவருக்கு தெரியும். அவர், தான் தேர்ந்தெடுக்கும் மனிதர் மிக சரியானவராக இருக்க வேண்டுமென ஆசைப்பட்டார். அப்படிப்பட்டவர், தன் சத்திரத்தில் வேலை பார்ப்பவராகவே இருந்து விட்டால், நல்லது என்று நினைத்தார் அவர்.

மறுநாள், அவர் தன் தம்பியிடம் "என்னுடன் வெளியே வா" என சத்திரத்திற்கு வெளியே அழைத்துச் சென்றார். அங்கே சாலையின் நடுவில் ஒரு சிறு கல் நீட்டிக்கொண்டு இருந்தது. சத்திரத்திற்கு வந்து போவோரில் சிலர், அந்த கல் பட்டு தடுக்கி விழுந்தனர். அதில் பலர் கல்லை எட்டி உதைத்து விட்டு திட்டி கொண்டே சென்றனர். சிலர் கல்லை பார்த்து விட்டு பத்திரமாக ஒதுங்கி சென்றனர். சிலர், "அடடா கல் இப்படி இருக்கிறது. யாரும் இதை எடுக்கவில்லையே" என்று முணுமுணுத்து கொண்டே சென்றனர். சிலர், "கல் என்றால், இப்படித்தான் அப்படி இப்படி இருக்கும்" என்று தங்களுடன் வருவோரை ஜாக்கிரதைப்படுத்தி கொண்டே சென்றனர். அப்பொழுது அந்த சத்திரத்தில் வேலை பார்த்து வந்த சுகுணன் என்பவன் வந்தான். அவன் "இந்த கல் நேற்று



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

இல்லையே. இன்று எப்படி வந்தது?" என்று யோசித்தான். அது வருவோர் போவோருக்கு இடையூறாகவும், சிலர் அடிபடவும் காரணமாக இருப்பதையும் பார்த்தான். உடனே ஒரு கோடாலியும், கடப்பாரையும் கொண்டு வந்தான். கல்லுக்கு அருகிலிருந்த மண்ணை கொஞ்சம் கொத்தி, கல்லை அந்த இடத்திலிருந்து எடுத்து தூரமாக போட்டான்.

அடுத்த நாள் அந்த செல்வந்தர், சுகுணன்தான் சத்திரத்தின் அடுத்த பொறுப்பாளனாக இருப்பான் என்று அறிவித்தார். அவர் தம்பி அப்பொழுது "எப்படி இந்த முடிவிற்கு வந்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர், "நேற்று அந்த கல்லை பார்த்தாயே. பலர் அதை லட்சியம் செய்யவே இல்லை. அவர்களுக்கு பொது விஷயத்தில் அக்கறை இல்லை. யார் அதை கவனிக்கவே இல்லையோ, அவர்களுக்கு செயலில் கவனம் குறைவு. யார் கல் இப்படித்தான் இருக்கும்; இதை சரி செய்ய முடியாது என்றோ கல்லில் அடிபட்டதால் அதை திட்டி சென்றார்களோ, அவர்களுக்கு, பலரும் அடிபடாமலோ, தடை இல்லாமலோ செல்ல வேண்டும் என்ற பரந்த முற்போக்கு சிந்தனை இல்லை. யார் தனக்கும் மற்றவருக்கும் இது இடைஞ்சல் என்று நினைப்பதோடு மட்டுமல்லாமல், அந்த கல்லை எடுக்கவும் முயற்சி செய்தார்களோ, அவர்களுக்குத்தான் நல்ல சிந்தனையும் உதவும் குணமும் இருக்கிறது. அப்படி செய்தவன் சுகுணன் மட்டும்தானே? நீதான் பார்த்தாயே. அதனால் அவனுக்குத்தான் நம் அன்னதான கூடத்தை, சரியாக நிர்வகித்து செல்லும் திறனும் நற்குணமும் இருக்கிறது" என்றார்.

அப்பொழுது தம்பி, "பெரிய குணங்கள் கூட சின்ன செயலில்தான் வெளிப்படுகிறது இல்லையா?" என்றார். அதற்கு ஆமோதித்த அப்பெரியவர், "நீ சொல்வது முற்றிலும் சரி. உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன் கேள். பெரிய குணங்களை அடைய ஆசைப்பட்டால், நீ முதலில் உன் வாழ்வில் வரும் சிறிய செயல்களை செய்து பழகு. அதுவே உனக்கு நற்குணத்தையும், அதனால் பெரியோர்களின் ஆசியையும் இறைவனின் அருளையும் பெற்றுத் தரும்" என்றார். அதை கேட்ட சகோதரர் மிகவும் சந்தோஷப்பட்டார். அன்ன சத்திரத்திற்கு நல்ல பொறுப்பாளர் கிடைத்தாரென்பதால் ஊருக்கே நன்மை ஏற்பட்டதென சொல்லவும் வேண்டுமோ?


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

**செப்டம்பர் 24- அக் 1** பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்பாக ஸ்ரீவேத வியாச புராண பாடசாலை டிரஸ்டின் "ஸீதாராம ஹால்" க்ரஹப்ரவேசம் மிக விமரிசையாக ஹோமங்களுடன் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் "ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்" என்ற தலைப்பில் ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்த ப்ரவசனம் செய்தருளினார்கள். மாதுரீ ஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் பெங்களூரு சென்றிருந்தார். பூர்த்தி நாளன்று ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது.

**செப்டம்பர் 24** சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவிலில், நவராத்திரி விழா துவக்க நாளன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

**அக்டோபர் 3** சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாளின் அவதார உத்ஸவம் மிக சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த அனைவருக்கும் சிறப்பான ப்ரசாதம் வழங்கப்பட்டது.

**அக்டோபர் 5** ஸ்ரீஸ்வாமிஜி செங்கல்பட்டு அருகே படாலம் ஸ்ரீசுந்தரராஜ பெருமாள் கோவில் மற்றும் சாத்தான்சேரி விட்டலராஜன் கோவிலிலும் தரிசனம் செய்தார்கள். செங்கல்பட்டில் நடைபெற்ற பத்மாவதி கல்யாணத்தில் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**செப்டம்பர் 20 - 28** சிங்கப்பூர் நாமத்வார் சார்பாக, சிங்கப்பூர் PGP கல்யாண மண்டபத்தில் ராமானுஜம்ஜி வால்மீகி ராமாயண உபன்யாசம் நிகழ்த்தினார்.

**அக்டோபர் 6 - 12** சிவகாசி நாமத்வாரில், பூர்ணிமாஜி திரளான அன்பர்கள் முன்பாக பாகவத ப்ரவசனம் செய்தார்.

**அக்டோபர் - 14-18** தேதிகளில், மதுரை மதனகோபால் ஸ்வாமி கோவிலிலும், 19ஆம் தேதி விருதுநகர் நாமத்வாரிலும், 20ஆம் தேதி காரியாபட்டி க்ருஷ்ணர் கோவிலிலும், முரளிஜி சத்சங்கம் நிகழ்த்தினார்.

**செப்டம்பர்** ராமானுஜம்ஜி செப்டம்பர் மாதத்தில், வளைகுடா நாடுகளில், திரளான அன்பர்கள் முன்பாக ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் செய்தார். ராமானுஜம்ஜி தற்பொழுது அமெரிக்காவில் சத்சங்கம் நிகழ்த்தி வருகிறார். நிகழ்ச்சி நிரலுக்கு நாமத்வார் இணையதளத்தை பார்க்கவும்.



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபா -3

ராதாக்ருஷ்ண யுகளத்தின் மானஸீகமான ஸேவையிலேயே பாபா எப்பொழுதும் மூழ்கியிருப்பார். அவரது வாயிலிருந்து எப்பொழுதும் 'ராயீ ராயீ' என்று த்வனி வந்து கொண்டே இருக்கும். இரவில் த்யானத்தில் ராதையை உறங்க வைத்துவிட்டு தானும் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வார். ஆனால் ஒரு ஒன்றரை மணி நேரத்திற்கெல்லாம் மீண்டும் எழுந்து 'ராயீ ராயீ' என்று சொல்லத் தொடங்கிவிடுவார். அச்சமயங்களில் அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

அவரிடம் யார் எந்த நேரத்தில் வந்தாலும், அந்த காலத்திற்கான லீலை ஸம்பந்தமான ஒரு பதத்தை (பாட்டு) அவர்களுக்கு பாடிக் காண்பிப்பார். வந்தவரிடம் அவரது ராசி என்ன என்று விசாரிப்பார். அந்த ராசிக்கு தகுந்தபடி அவருக்கு ராதையின் ஸகிகளான லலிதா, விசாகா, ரங்கதேவி போன்ற பெயர்களை வைத்து 'இன்று முதல் இதுதான் உன் பெயர்' என்று கூறுவார். மேலும் அந்த ஸகியின் வண்ணம், அழகு, உடை, ஆபரணங்கள் மற்றும் அவள் புரியும் ஸேவையை பற்றியும் எடுத்துரைப்பார். வந்தவரை வேறு எந்த விஷயமும் கேட்கவோ சொல்லவோ விடவே மாட்டார். இத்தனையும் மீறி, வந்தவர் தனது ஸம்ஸார விஷயங்கள் ஏதாவது பேசுவாரேயானால், அவரை திட்டி தனது குடிசையிலிருந்து வெளியேற்றிவிடுவார்.

பாபா எப்பொழுதும் **பா**வத்தில் மூழ்கியேயிருப்பார். அவரது உடல் வ்யாபாரங்கள் யந்திரம் போல் நடக்கும். சௌசாதிகளுக்கு சென்றாலும் அப்படித்தான். அந்த இடத்திலேயே, அவர் மூன்று நான்கு மணி நேரம் அமர்ந்திருப்பார். கண்கள் மேல் நோக்கி நிலையாக இருக்கும் அவரது த்யான நிலையை அது குறிக்கும். ஆனால் வாயில் எப்பொழுதும் ராயீ ராயீ என்ற நாமம் வந்து கொண்டேயிருக்கும்.

பல நாட்களாக பாபா மதுகரிக்கு செல்வதை நிறுத்தி விட்டார். அதற்கு அவருக்கு பொழுது ஏது? அதனால் வ்ரஜவாசிகளோ, சிஷ்யர்களோ அவருக்கு ப்ரஸாதத்தை கொண்டு தருவார்கள். ஒருமுறை, பலத்த மழையினால் பாபாவின் குடிசை நாற்புறமும் தண்ணீரால் சூழ்ந்தது. அதனால் அவரிடம் செல்வது



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

மிகவும் கடினமாயிற்று. அச்சூழலிலும் பாபா அந்த குடிசையை துறக்க விரும்பவில்லை. அச்சமயம், அனுராகி பாபா அவருடன் தங்கி ஸேவை செய்தார். இரவு மழை மிகவும் பலமாக பெய்தது. திடீரென்று பாபாவின் விரலை ஒரு தேள் கொட்டி விட்டது. ஆஹ்! தாங்க முடியாத வேதனை! அனுராகி பாபா உடனடியாக விரலை நன்றாக ஒரு கயிற்றால் இறுகக்கட்டினார். மேலும் என்ன செய்வது, விஷம் பரவாமலிருக்க என்ன உபாயம் செய்வது? தண்ணீரைக் கடந்து எங்கே செல்வது? என்று பலவாறாக பரிதவிக்கலானார் அனுராகி பாபா. அப்போது பாபா, ''குழந்தாய்! எங்கும் போகவேண்டாம்! சிறிது நேரத்தில் த்யானத்தில் (லீலையில்) மூழ்கிவிடுவேன். நீ ஒன்றும் செய்ய வேண்டாம். காலைக்குள் எல்லாம் சரியாகிவிடும் என்று கூறினார். அப்படியே ஆயிற்று! பார்க்க பார்க்க பாபா த்யான மக்னரானார்.

காலையில் முகத்தை அலம்பியபின் அனுராகி பாபா கேட்டார், 'பாபா! வலி எப்படி இருக்கிறது?'

என்ன வலி?

இரவு தேள் கொட்டியதே!

அது எங்கே கொட்டியது?

'தங்கள் விரலில்' என்று கூறிக்கொண்டே அனுராகி பாபா விரலின் கட்டை அவிழ்த்தார். அப்போது பாபா, "ஓ! இதுவா! சிறிது கடுக்கத்தான் செய்கிறது'' என்று கூறினார். வயதானதால் பாபாவின் கண்பார்வை மங்கிவிட்டது. தன் வாழ்நாள் முழுவதும், அந்த மசானபூமியில் அமைந்த குடிலிலேயே பாபா சாந்தமாகவும் ப்ரஸன்னமாகவும் கழித்தார். பாபா மாயைக்கும் ஸம்ஸாரத்திற்கும் சவால் விடுவதுபோல் இந்த குடிலில் எப்போதும் அந்தர் முகமாகவே அமர்ந்திருந்தார். ப்ரபுவின் சரணகமலங்களில் தனது ஜீவனம் எனும் படகின் நங்கூரத்தை நிலைநிறுத்திவிட்டு அவர் கவலையற்றிருந்தார். ஸம்ஸார கடலின் பேரலைகளோ, புயல் காற்றோ அவரை அவரது ஸ்தானத்திலிருந்து நகற்ற சற்றும் முடியவில்லை. எப்பொழுதும் பகவத் சரண த்யானத்திலேயே மூழ்கி, அவனுடைய மதுரமான லீலைகளிலேயே ஆழ்ந்திருந்தார். வெளி உலகில் என்ன நடக்கிறது என்று அவர் சற்றும் அறியார். அவ்வுலகின் எந்த நபரிடமிருந்தோ அல்லது பொருளினாலோ அவருக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. பகவான் தானே அவரது யோக க்ஷேமத்தை வஹித்தான். 1974ஆம் ஆண்டு வைகாசி மாதத்தின் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியில் தனது 112வது வயதில் பாபா நித்யலீலையில் ப்ரவேசித்தார்.

(தொடரும்)



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# மாலே மணிவண்ணா - 133




—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் கூடலழகர் கோயிலை "இருந்த வளம் உடையார் கோயில்" என்று கூறியதில் இன்னொரு கருத்தும் உள்ளது. இருந்த வளம் உடையார் என்பது ஆதிசேடனாகிய அரவணை மேல் எம்பெருமான் வீற்றிருக்கின்றார் அல்லவா? அவ்வாறு இருந்த வளம் உடையார் என்று எம்பெருமானை குறிப்பிடும்.

இனி எம்பெருமான் இருந்த வளத்தை உடையார் என்று ஆதிசேடனையும் குறிக்கும். அவ்வகையில் இது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அமைந்த சயனத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள கோயில் என்பதனோடு அவ்வாறு நின்றும் இருந்தும் கிடந்தும் எம்பெருமான் இருக்க பெற்ற வளத்தை உடையார் ஆகிய ஆதிசேடனை குறித்து நிற்கும். அவ்வகையில் இருந்த வளம் உடைய ஆதிசேடனை சிறப்பித்து உரைப்பதே இப்பாசுரத்தின் கருத்து.

எம்பெருமானிடத்தில் ஈடுபட்ட ஆழ்வாராதிகளும் ஆதிசேடனிடத்தில் பெரிதும் ஈடுபட்டவர்களே என்பது திவ்யப்ரபந்த ஸ்ரீசூக்திகளால் அறியலாம்.

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

என்பது பொய்கையாழ்வாரது முதல் திருவந்தாதியில் 53ஆம் பாசுரமாகும். ஆதிசேடனை வணங்குவதும் பாடுவதும் பாராட்டுவதும் எம்பெருமானை வணங்குவதாகவே ஆகும் என்பது ஆழ்வாராதிகளின் துணிபு. அவதார சீலத்திலும் அனந்தாழ்வான் ஸ்ரீராமனுக்கு பிரியாத்தம்பியாகிய இளைய பெருமாளாக அவதரித்தவர் அல்லவா? ஸ்ரீகிருஷ்ண அவதாரத்திலும் பெருமானுக்கு மூத்தவராக பலராமனாக அவதாரம் செய்தவரன்றோ? தொடரும்)


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

**சனாதனப்புதிர் பகுதி 67 - விடைகள் -ஆத்ரேயன்**

1. தியாகராஜ அஷ்டகம். திருவாரூரில் வாசம் செய்ததால் தியாகராஜரை பற்றிய எட்டு ஸ்லோகங்கள்.

2. திருக்கருகாவூர்; ஸ்ரீகர்ப்பரக்ஷாம்பிகை. வேதிகை என்ற பெண்ணுக்கு பிரசவ காலத்தில் சிரமம் ஏற்பட்டதால் அம்பாள் காத்து அருள் புரிந்தாள்.

3. ஸூர்ய பகவானின் 108 நாமங்களை; கிடைத்தது அக்ஷய பாத்திரம். (மஹாபாரதம் - வனபர்வா)

4. பாத்ம புராணத்தில் கஜாரண்ய மஹாத்மியத்தில் காணப்படுகிறது.

5. கும்பகோணத்தில் உள்ள கொட்டையூரை; இங்கே அருள் பாலிப்பவர் - கோடீஸ்வரர்; கந்துகக்ரீடாம்பிகை;

6. பவிஷ்யோத்திர புராணம்.

7. ஸ்காந்த புராணம் - வைத்யநாத மஹாத்மியம்.

8. இது பெரும்பாலும் "கத்ய" Prose வசன நடையில் இருக்கிறது. செய்யுள் நடையில் இல்லை.

9. ஸ்ரீமத் பாகவதம் - 5வது ஸ்கந்தம்.

10. 14-12-1587 - 27வயது.


# Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

## ENDOCRINE & SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com




PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

# செய் நன்றி

- ப்ரும்மஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

தமிழ் மூதாட்டியான ஔவையார், செய்நன்றியைப் பற்றி சொல்லும்பொழுது தென்னைமரத்தை உதாரணமாகச் சொல்லுகின்றார்.

நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால் - மூதுரை

தென்னை மரம், தன் வேரினிலே நீரை பெற்றுக்கொண்டு தன் தலையில், சுவையுள்ள இளநீராக ஆக்கி தருகிறது. அப்படித்தான் ஞானிகளுக்கும் பெரியோருக்கும் செய்யும் சேவையானது, என்ன பலனை தரும் என்று கேட்க தேவையில்லை. அது மிக சிறந்த பலனை தரும் என்கிறாள் அவ்வை.

அதுபோல் ஸ்ரீமத் ராமாயணத்தில், ராமருடைய ஆத்ம குணங்களையெல்லாம், வால்மீகி, வர்ணித்துக்கொண்டு வரும்பொழுது, ஒருவர் ராமருக்கு எவ்வளவு தீமைகளை இழைத்து வந்தாலும், அதை அவர் நினைவிலேயே வைத்துக்கொள்ளமாட்டார் என்றும்; ஆனால், ஒருவர் சிறிது உபகாரம் செய்திருந்தாலும் கூட, அதை என்றென்றும் மறக்கமாட்டார் என்றும் சொல்லுகின்றார்.

நன்றி மறக்காமல் இருத்தல் என்பது ஒரு ஆத்ம குணம். பூமியில், நாம் ஒரு மூட்டை விதை விதைத்தால், அதை நூறு மூட்டையாக அறுவடை செய்கின்றோம். அதுபோல் மஹான்கள் விஷயமாகவும், தெய்வ விஷயமாகவும் செலவழிக்கின்ற பணமும் நேரமும் ஒருக்காலும் வீண்போகாது. அது, பலமடங்காக நன்மைகளை நமக்குத் திருப்பித்தரும். ஸ்ரீமஹாபெரியவாள் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம், இதை நமக்கு உணர்த்துகின்றது.

**1954**ம் வருடத்திற்கு சற்று முன்பாக ஸ்ரீமஹா


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

பெரியவாள் உடையார்பாளையம் என்ற ஊரில் தங்கியிருந்தார். அப்பொழுது, உடையார்பாளையம் ஜமீன்தார் ஸ்ரீ மஹாபெரியவாளுக்கு வெகு விமரிசையாக பட்டினப் பிரவேசம் ஏற்பாடு செய்து வரவேற்றார். அதோடு மட்டுமல்லாமல், ஸ்ரீமடத்திற்குத் தேவையான சகலவிதமான வசதிகளையும் செய்து கொடுத்தார். அதன்பிறகும் பல தடவைகள் மடத்திற்கு வேண்டிய அரிசி, பருப்பு, காய்கறிகள், வாழை இலைக்கட்டு, தேங்காய்கள், பழங்கள், புஷ்பங்கள் அனுப்பிக்கொண்டே இருப்பார். இவைகளையெல்லாம் மிகுந்த பக்தி, சிரத்தையுடன் செய்வார்.

ஜமீன்தார் அவர்கள் காலத்திற்குப் பிறகு, அவருடைய பேரன் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்தார். அதில் பணக்கஷ்டம் மிகவும் அதிகம். கடன்தொல்லைகள் அதிகம். அவர்களால் அதிலிருந்து மீளமுடியவில்லை.

1984ம் வருடம் முதல், ஸ்ரீ மஹாபெரியவாள் காஞ்சி மடத்தில் தங்கியிருந்தார்கள். 85 அல்லது 86ம் வருடமாக இருக்கலாம், சரியாக ஞாபகம் இல்லை. அந்த ஜமீன்தாரின் வாரிசுகள், அவர்கள் மூதாதையர்கள் செய்த தர்ம காரியத்தின் புண்ணிய பலனாக ஸ்ரீமஹாபெரியவாளை வந்து சரணடைந்தார்கள். ஸ்ரீமஹாபெரியவாளிடம் தங்களுடைய குடும்பத்தின் தற்போதைய நிலையையும், எல்லா கஷ்டங்களையும் கூறி அழுதார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள் அவர்களை சில நாட்கள் ஸ்ரீமடத்திலேயே தங்கச் சொல்லிவிட்டு, ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். இது நடப்பதற்கு சில வருடங்களுக்கு முன்பாக, செட்டிநாட்டு அரசர் எம்.ஏ.எம் ராமசாமி செட்டியார், 'ஸ்ரீமஹாபெரியவாளுக்காக 10லக்ஷ ரூபாய் பணம் எடுத்து வைத்துள்ளேன். அதனை ஸ்ரீமஹா பெரியவாள் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று பிரார்த்தித்தார். அப்பொழுது ஸ்ரீ மஹாபெரியவாள் அவரிடம் "அந்தப் பணம் உன்னிடமே இருக்கட்டும், ஏதாவது தேவையான சமயம் வந்தால் நான் சொல்லி அனுப்புகின்றேன். அதன்படி செய்யுங்கள்" என்று சொல்லியிருந்தார்கள். எம்.ஏ.எம்.ராமசாமி செட்டியாரும், அந்த பணத்தை, ஸ்ரீமஹாபெரியவாளுக்கு என்று தனியாக எடுத்து வைத்திருந்தார். நானும் (ஏகாம்பரம்), வேப்பத்தூர்


PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

ராதாகிருஷ்ணன் மற்றும் சிலரும், ஸ்ரீமஹாபெரியவாளின் தரிசனத்திற்குச் சென்றிருந்தோம். அப்பொழுது, ஸ்ரீ மஹாபெரியவாள், 'உடையார்பாளையம் ஊரில், தான் தங்கியிருந்தது, பூஜை செய்தது, அந்த ஜமீன்தார் ஸ்ரீமடத்திற்குச் செய்த பல உபகாரங்கள்' இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி, இப்பொழுது அவருடைய வாரிசு தன்னை தரிசனம் செய்ய வந்ததையும், அவர்கள் படும் சிரமத்தையும் மிகவும் வருத்தத்துடன் சொன்னார்கள்.

எங்களை, ஸ்ரீமடம் ஏஜெண்ட் ஸ்ரீ TN.க்ருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களையும், உடன் அழைத்துக்கொண்டு போய், எம்.ஏ.எம்.ராமசாமி செட்டியாரைப் பார்த்து அவர் தனக்காக எடுத்து வைத்திருக்கும் 10லக்ஷ ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டு, உடையார்பாளையம் சென்று அந்த ஜமீன் குடும்பத்திற்கு இருக்கக்கூடிய கடன்களையெல்லாம் அடைக்கச் சொன்னார். அது போதாது என்றால், ஸ்ரீமடத்திலிருந்து பணம் எடுத்துச் சென்று அடைக்கச் சொன்னார். மீதி இருந்தால், அந்த பணத்தை அவர்களிடமே கொடுத்துவிட்டு வந்துவிடச் சொன்னார். நாங்களும் அதன்படியே செய்தோம்.

கடன் அடைத்தது போக, 4லக்ஷ ரூபாய், மீதி இருந்தது. அதை அந்த ஜமீன்தாரின் குடும்பத்திற்கே கொடுத்து வந்துவிட்டோம். அந்த ஜமீன்தாரின் வாரிசுகள், ஸ்ரீமஹாபெரியவாளின் க்ருபையை நினைத்து அழுதுகொண்டே இருந்தார்கள்.

என்றோ அவர்கள் செய்த, ஒரு சிறு உபகாரத்தையும் மறக்காமல் அவர்களுக்கு ஒரு சிரமம் ஏற்படும்பொழுது அதை நினைவில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ மஹாபெரியவாள் தன் கருணையைப் பொழிந்ததை நினைக்கும்பொழுது, அன்று அவதாரம் செய்த ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவும் இவர்தானோ என்று தோன்றுகின்றது. (நிகழ்வுகள் தொடரும்)

**அக்டோபர் 4 முதல்** (4.10.2014) - **காலை 7.20 - 7.30AM** **ஒவ்வொரு சனிக்கிழமையும்** *பொதிகை* **தொலைக்காட்சியில்** "*மதுரகீதம்*" - **ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.**



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ஏகாதசி | நவம்பர் 3, 18 டிசம்பர் 2, 18 |
| நவ 9 | ஸ்ரீவைகுண்ட விண்ணகரம் - சம்ப்ரோக்ஷணம் |
| நவ 10 | CCVV Trust வேதபாடசாலை கோயம்புத்தூர் |
| டிச 5 | சிருங்கேரி கல்யாண மண்டபம் ஆழ்வார்பேட்டை, நாராயண தீர்த்தர் சத்சங்கம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**



PLEASE RENEW SUBSCRIPTIONS IMMEDIATELY